செ.வெ.எண்:918/2016 நாள்: 29.12.2016

# பத்திரிக்கை செய்தி வெளியீடு

## 29.12.2016 மற்றும் 30.12.2016அன்று நடைபெறவுள்ள கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகளுக்கான ”இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம்”

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15.09.2011 அன்று தொடங்கப்பட்ட விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களில், தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக. ஒரு பயனாளிக்கு, 4 வெள்ளாடுகள் /செம்மறி ஆடுகள் வீதம் 31 மாவட்டங்களில் 7,00,000 பயனாளிகளுக்கு 28,00,000 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகளும், தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில், 21 மாவட்டங்களில், 60,000 பயனாளிகளுக்கு 60,000 கறவை பசுக்களும் 2011-2012 முதல் 2015-2016 முடிய உள்ள ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மேற்படி திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட்ட விபரம் கீழ் வருமாறு

| வ.எண் | ஆண்டு | குறியீடு | | சாதனை | |
|---|---|---|---|---|---|
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை |
| 1 | 2011-2012 | 1898 | 7592 | 1898 | 7592 |
| 2 | 2012-2013 | 2478 | 9912 | 2478 | 9912 |
| 3 | 2013-2014 | 1577 | 6308 | 1577 | 6308 |
| 4 | 2014-2015 | 3326 | 13304 | 3326 | 13304 |
| 5 | 2015-2016 | 1911 | 7644 | 1911 | 7644 |
| 6 | 2016-17 Upto November | 269 | 1076 | 269 | 1076 |

மாண்புமிகு முதல்வர் அவர்கள், விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்கள். பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு மேற்படி ஆண்டுகளின் தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/ செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகள்/ செம்மறிஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் 29.12.2016 மற்றும் 30.12.2016 ஆகிய நாட்களில் கறவைப் பசுக்களுக்கு, இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு/செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது என கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குநர் (கூ.பொ) மரு. பின்டன் மிசியர் அவர்கள் செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.